செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 410 நாள்: 13/7/17

## செய்தி வெளியீடு

வேலூர் மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகதில் முன்னாள் படைவீரர்/படைவீரர்களின் சார்ந்தோருக்கான 6 மாத கால தையல் பயிற்சி வகுப்பு துவங்கப்பட உள்ளது. இப்பயிற்சி வகுப்பில் கீழ்குறிப்பிட்டுள்ள தகுதியுடைய முன்னாள் படைவீரர்கள் மற்றும் படைவீரர்களை சார்ந்தோர் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

**தகுதிகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | முன்னாள் படைவீரர்களின் மனைவியர்/ கைம்பெண் மற்றும் படைவீரர்களின் மனைவியர். | )( | 5ம் வகுப்பு தேர்ச்சி பெற்று 45 வயதுக்கு உட்பட்டு இருக்க வேண்டும். |
| 2. | அ. முன்னாள் படைவீரர்களின் திருமணமாகாத மகள் மற்றும் திருமணமாகாத சகோதரிகள். | )( | 8ம் வகுப்பு தேர்ச்சி<br>15 வயதுக்கு மேல்<br>25 வயதுக்குட்பட்டு இருக்க வேண்டும். |
| | ஆ. படைவீரர்களின் திருமணமாகாத மகள் மற்றும் திருமணமாகாத சகோதரிகள். | )( | |

பயிற்சியில் பங்கேற்பவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.50/– வீதம் உதவித் தொகையும் மாதம் ரூ.1000/– பெறுமான கச்சாப் பொருட்களும் இலவசமாக வழங்கப்படும். பயிற்சி முடிவுற்றதும் இலவசமாக தையல் இயந்திரமும் வழங்கப்படும்.

இப்பயிற்சி வகுப்பில் சேர்ந்து பயனடைய விரும்பும் வேலூர் மாவட்டத்தைச் சார்ந்த முன்னாள் படைவீரர்கள் மற்றும் படைவீரர்களை சார்ந்தோர்கள் வேலூரில் உள்ள முன்னாள் படைவீரர் நல துணை இயக்குநர் அலுவலகத்தை அணுகி உரிய படிவத்தினை பெற்று 20.07.2017 – க்குள் விண்ணப்பித்து பயனடைய கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அலுவலக தொலைபேசி எண் 0416 2220432

12/07/2017

துணை இயக்குநர்
முன்னாள் படைவீரர் நலன்,
வேலூர்

13/7/17 12/7/17 12/7/17

செ.ம.தொ.அ. ...
...ர்- 9.